(ஈ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 183-வது விதியின் கீழ் 1979—80-ம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(உ) அவைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 221 (1)-வது விதியின் கீழ் 1979—80-ம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(5) அறிவிப்பு.

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு:—

ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) பொதுக் கணக்குக் குழு (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி), பொது நிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி), உரிமைக் குழு (கமிட்டி